**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

**Form No. 53 of Criminal Rules of practice 2019 )**

**10.10.2025** **DVC.No. 10/2022** **PW.1 சாரதா**

**கடந்த 04.09.2025 முதல் விசாரணை சய்யப்பட்டடு இன்று சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**சாட்சி சத்தியம் பிராமாணம் செய்யப்பட்டது.**

1 முதல் 5 எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

**1 மற்றும் 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1 மற்றும் 3 எதிர் மனுதாரர்கள் ஆஜர். 2,4,5 எதிர் மனுதாரர்கள் ஆஜரில்லை. எதிர் மனுதாரர் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்சமயம் எங்கு வசித்து வருகிறேன் என்றால் கேரளபுரத்தில் உள்ள என் அண்ணன் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு இந்நீதிமன்றத்தால் கணவர் வீட்டில் வசிக்க சொல்லி உத்தரவு பிறப்பித்தது நான் அங்கு சென்று வசிக்கும் போது எதிர் மனுதார்களால் பிரச்சனைகள் ஏற்பட்டது. அதனால் என் அண்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டேன். 2018ல் இருந்து நான் என் கணவர் வீட்டில் வசிக்காததால் அந்த வீடு பழுதடைந்து விட்டதால் நான் என் அண்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

2. நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் சேலம் மாவட்டம் என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட நகைகள் பொய் என்றால் இல்லை. 08.07.2006ல் எனக்கும் என் கணவருக்கும் ஆண் குழந்தை பிறந்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் நானும் என் கணவரும் ஒரு ஆண் குழந்தையை தத்தெடுத்துக் கொண்டோம்.

3. நான் என் திருமணத்தின் போது கொண்டுவந்த நகைகளை வைத்து வீடு கட்டவில்லை என்றாலும் நடராஜன் என்பவரின் பணத்தில் தான் என் கணவர் வீடு கட்டப்பட்டது என்றாலும் சரியல்ல. 2, 3 எதிர்மனுதாரர்கள் வீடு எங்கு உள்ள என்றால் ஆளுர் என்ற இடத்தில் உள்ளது. நான் என் மனுவில் குறிப்பிட்டுள்ள எனது முகவரிக்கும் ஆளுர்க்கும் இடையே 10 கிமி தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது.

4. 2, 3 எதிர்மனுதாரர்கள்சொந்த வீட்டில் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரி வீட்டின் அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 6 சென்ட் இருக்கும். அந்த 6 சென்ட் இடமும் அதில் அடங்கிய வீடும் 2ம் எதிர் மனுதார் தனக்கு கிடைக்க வேண்டும் என்று பிரச்சனை செய்ததாக நான் பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. நான் மனுவின் முகவரியில் வசிக்கும் போது அவ்வப்போது சேலம் சென்று வருவேனா என்றால் சரிதான். அப்படி சென்று வரும்போது ஒரு நாள் எனது வீட்டில் அலமாறியில் பூட்டு உடைந்து திருடு போயிருந்தது என்றால் சரிதான். அதற்காக நான் புகார் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.

5. மனுவில் குறிப்பிட்டுள்ள வீட்டில் நான் தங்கியிருக்கும் பகுதி வீட்டின் முன் பின் இரண்டு பக்கமும் தாழ்ப்பாள் உள்ளது என்று சொன்னால் சரிதான். 3 எதிர் மனுதாரர்களும் என் கணவர் இறந்த பிறகு என்னை வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் முழுமனதோடு எனது கணவருக்கு 4 சென்ட் , 2ம் எதிர் மனுதாரருக்கு 2 சென்ட் உயில் எழுதி கொடுத்தார் என்றால் இல்லை. 2ம் எதிர் மனுதாரர் வற்புறுத்தியதால் 2ம் மனுதாருக்கு உயில் எழுதி கொடுத்தார்.

6. மேற்படி உயில் 07.05.2015 அன்று என் மாமியார் இறந்து இது நாள் வரையிலும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரிதான். அந்த உயிலை நான் நடைமுறைப்படுத்த இந்நாள் வரை முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மாமியார் இறந்த பிறகு உயில் பத்திரத்தை என் கணவரிடம் கொடுத்தார்கள் அதனை என் கணவர் எங்கள் வீட்டில் வைத்திருந்தார் அதன் பின் என் கணவர் மற்றும் என் மகன் இறந்துவிட்டார்கள். அதன் பின் அந்த உயில் காணவில்லை. எனது மகன் இறந்த 41வது நாளில் என்னை மட்டும் என் சகோதரர்கள் அழைத்துச் சென்றார்கள் என்றால் இல்லை என் கணவரையும் சேர்த்்து அழைத்துச் சென்றார்கள்.

7. எனது குழந்தை இறந்த பிறகு என் கணவர் அதிகமாக குடித்தார் என்று என் மனுவில் குறிப்பிட்டுள்ளதை அடுத்து அவருக்கு மருத்துவசிகிட்சை அளிக்கப்பட்டதா என்றால் சரிதான். அந்த மருத்துவ பதிவேடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்யலாம். என் கணவர் இறக்கும் நாட்களில் தக்கலை மற்றும்

ஆசாரிபள்ளம் அரசு மருத்துவனையில் தான் இருந்தார் என்றாலும் அப்போது நான் அவர் உடன் இல்லை என்றாலும் சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram (FAC)